பருவகாலக் கடை

கூடை விரித்தாகிவிட்டது. கடை வைக்காவிட்டால் நீலிக்குக் கவளம் இறங்காது. தலை சாயாது. சாய்ந்தாலும் தூக்கம் வராது. இந்த வேதனையை ஒரு நாள் அவன் உணர்ந்து கொண்டான்.

" ஏண்டி, இந்தச் சுள்ளிக்கட்டு வேபாரம் வாணுங்க றேனே. ஒனக்குச் சோறு இல்லியா, தண்ணி இல்லையா? நான் சம்பாரிக்கிறது போருதுன்னு சொல்லு, ஒப்புக் கிறேன்."

" வவுறு நெறஞ்சா ஆயிடுச்சாக்கும்!"

" இந்த வவுத்தை நெறெக்கத்தான் ஹைக்கோர்ட் டிலே சம்பளம் குடுக்கறுங்களே, இன்னம் என்ன செய் வாங்க? பிள்ளையா குட்டியா? நீயும் நானும். சுள்ளிக் கட்டு வித்து என்ன ஆவணும்?"

" மூஞ்சியைப் பாரு. நான் அதையா சொன்னேன்? ஒனக்குப் போய்க் கொடுத்தாங்களே—ஆத்திலெ குளத்திலே தள்ளாமெ."

" கோவிச்சுக்காதே நீலி. எம்மேலே என்ன பிசகு? அப்பொ எல்லாம் இப்பிடியா இருந்தேன்? சாமி கெடுத் திச்சுன்ஞ நானு புணே?"

" அதுக்காக எனக்கு வேலி கட்டப் பார்க்கிறயா? வேணுமின்னு நல்லவளா செட்டவளான்னு ஆள் வச்சு உளவு பாத்துக்க."

" அப்படியா சொன்னேன்? பழி போடறியே; அரையணு காலணு லாபத்துக்குப் பொழுதினிக்கும் மைல் கல்லாட்டம் குந்திக்கிட்டே."

" நான் மைல் கல்லா இருக்கேன். நீ குட்டிச்சுவரா இருக்கியே—பொருத்தமாப் போச்சு, போ."

வாயில் இந்த வார்த்தையும் கண்ணில் தண்ணீரும் வந்த பிறகு கணவன் அவமானப்பட்டுத் தோற்றதிலிருந்து கடை நிலேத்து விட்டது.

கடை நிலேத்துவிட்டது. ஆனல் கடையின் இடத்திற்குத்தான் நிலேயில்லே. கடையிலுள்ள பொருள்களுக்கும் நிலே இல்லே. பருவத்தைப் பொறுத்த சரக்கு, பொதுச் சரக்கு ஆகியவை மாறி மாறிக் கடையில் இருக்கும். விற்பனேச் சரக்கு, சுள்ளிக்கட்டாக இருந்தால் எந்த நேரத்திலும் எந்த இடத்திலும் கடை இருக்கும். பருவகாலச் சரக்காக இருந்தால் கடை நிழலேப் பொறுத்து மாறும்.

கடையில் வியாபாரம் செய்வதென்ருல் எப்பொழுதும் அவள்தான் கடையில் இருப்பாள் என்பதில்லே. குறிப்பாகச் சில வேளேகளில் தவருது கடையில் இருப்பாள். கிராக்கிகள் வரும் நேரத்தைவிட அந்த நேரங்களில் கொஞ்சம் கல கலப்பு அதிகமாக இருக்கும். வேலேக்குப் போகும் அல்லது திரும்பி வீட்டுக்குப் போகும் கொத்தன், தச்சன், தொழிலாளி, செருப்புத் தைப்பவன், அவன் பெண்ஜாதி, ஆட்டை இழுத்துக்கொண்டு குட்டிகளேக் கையில் இடுக்கிக்கொண்டு செல்லும் கிழவி-அத்தனே பேரும் அவளுடன் நின்ருே நிற்காமலோ, பேசியோ சிரிக்காமலோ போக மாட்டார்கள். காலியாக இருக்கிற மனத்தை ஏதாவது போட்டு நிரப்ப வேண்டியதுதானே? அவள் பேசும் முறையில் தொனித்த நயம் பல்லி நாக்கு நுனியின் வளேவைப் போல் யாரையும் தப்பவிடாது. சில இளேஞர்கள்கூட ஏதோ மனக்கோட்டை கட்டிக்கொண்டு உட்கார்ந்து பேசுவார்கள். அவள் கணவ

னுக்கு இதுதான் உறுத்தல். ஆனால் உண்மையில் இவளுக்கோ இவ்வளவு பேருமோ. அல்லது அவர்கள் வீட்டுக் குழந்தைகளோ அல்லது எல்லாருமேயோ தன் கடைக் கிராக்கிகள்; இன்று இல்லாவிட்டால் நாளை என்ற நம்பிக்கை. இதைவிட மனத்திற்கு ஏற்பட்ட கலகலப்புத்தான் கடையில் அவளை ஊன்ற வைத்தது. வீட்டில் குழந்தை இல்லாவிட்டாலும் கடை சூழக் குழந்தைகள்!

இன்று கடை விரித்தாகிவிட்டது. இன்றைய பருவக் கடைக்குத் தங்கள் வீட்டுக்கூரை வாய்ப்பட்டை நிழல் உகந்த இடமன்று. இப்பொழுது சர்க்கரை வள்ளிக் கிழங்குப் பருவம். எதிர்ப்புறத்து மாடிவீட்டு நிழலில் சதுரமான சாக்கொன்றை விரித்து சுருக்கத்தைத் திருத்தினாள் திருத்தினாள், அப்படித் திருத்தினாள். ஆனால் தண்ணீரை வெட்டுவதுபோல அது பலிக்கவில்லை. பிறகு ஒரு சின்ன முனகலுடன் கூடையை இறக்கிவைத்து, மணிலாக் கொட்டை முடிச்சு ஒன்றிலிருந்து கூறு கட்டினாள். கூறு ஒன்றுக்குப் பன்னிரண்டு கடலை. விலைவாசி ஏற்றத்திற்கு முன்பு காலணுவுக்கு விற்ற கூறு இப்பொழுது நாலு பைசா. பிறகு ஒரு தட்டைஎடுத்து வேகவைத்த வெள்ளை சிவப்புச் சர்க்கரைவள்ளிக் கிழங்குத் துண்டுகளை வரிசைப்படுத்தினாள். ஈ ஓட்டுவதற்குக் குச்சி ஒன்று கொண்டு வந்திருந்தாள். காய்ந்த வாழைச் சருகை வைத்து ஈ ஓட்டலாம். ஆனால் பட்டணத்து மாடு வாய்வைக்க வந்துவிட்டால் விரட்டச் சருகு உதவாது. விளம்பரத் தட்டியில் இருக்கிற பசையை நக்கி, கட்டியிருக்கும் அட்டைகளைத் தின்னும் மாடு அடிக்கவரும் சருகை அணையவரும் உணவு என்று தின்றுவிடும். குச்சிகொண்டு வந்தது நியாயந்தான். இன்னொன்று, கடலையைக் காக்கை தின்னவந்தால் சருகால் ஓட்ட முடியாது. நின்ற இடத்தில் குதிக்கும் திருட்டு ஜட்காவண்டிக் குதிரைமாதிரி காக்கை அசைந்து கொடுத்து நெளிவெடுக்குமே ஒழிய, நகராது. அதனால் குச்சிவந்தது நியாயந்தான்.

நீலி கடையில் உட்கார்ந்து கோணிக்குப் பிள்ளையார் சுழி போட்டாள். இரண்டு கடலையைக் காக்காய்க்குப் போட்டுவிட்டு வியாபாரத்தைத் தொடங்கினாள். மூக்குச் சளிப்பையன் சர்க்கரை வள்ளிக்கிழங்கு வாங்கினான். பாவாடை இல்லாத பரட்டைத்தலைப் பெண் கடலை வாங்கினாள். வாங்கின காசை உடனே நீலி பைக்குள் போடவில்லை. காசை இடமிருந்து வலமாகச் சுற்றி வலம் செய்துவிட்டு மண்ணில் தொட்டுத் திருஷ்டி கழித்துச் சுருக்குப் பையில் போட்டாள். அப்புறம் கடையில் வியாபாரம் விட்டு விட்டு நடந்தது. ஒரு மணிநேரத்திற்குள் பாதித் தட்டுக் காலியாகிவிட்டது. இடையில் அவன், இவள், யார் யாரோ போனார்கள். நீலியோடு காலை நேர வேகத்துடன் பேசிச் சென்றார்கள். மாடி நிழல் கணிசமாகக் குறைய ஆரம்பித்துவிட்டது.

"அடி மாமியாரே" என்று கூப்பிட்டாள்.

ஒரு பரட்டைத் தலைச் சிறுமி இடுப்பில் குழந்தையை எடுத்துக்கொண்டு அருகில் வந்தாள்.

"இந்தா, கடையைப் பாத்துக்க. சோறுக்கிட்டு வாரேன்."

~~சிறுமி வியாபாரத்திற்கு அமர்ந்தாள். குங்குமம் வாங்~~கினால் கடைக்காரன் பெரிய பொட்டலத்துடன் தரும் சின்னப் பொட்டலம் போலக் குழந்தையும் வியாபாரத்திற்கு உட்கார்ந்தது.

சற்று நேரம் வியாபாரம் நடந்தது. பெரிய வர்த்தக ஸ்தாபனத்து ஊழியருக்கு இருக்கவேண்டிய கண்டிப்பும் நயமும் அவள் பேச்சில் கலந்திருந்தன. வியாபாரத்தை அவ்வளவு திறமையாக நடத்தினாள்.

இதற்குள் கடைக்கருகில் ஐந்தாறு சிறுமிகள் கும்பல் சேர்ந்தது. கற்களைப் பொறுக்கி விளையாட உட்கார்ந்ததும்

இவளையும் கூப்பிட்டார்கள். பொறுப்பு உணர்ச்சியில் முடியாதென்று தலையை ஆட்டிவிட்டாள்.

''கடையில் ஆள் இல்லை.''

''சும்மா வா. கிராக்கி வந்தால் ஏந்திருச்சுப் போகலாம்'' என்று சிக்கலுக்கு வழிகாட்டி அவர்கள் மறுபடி வருந்தி அழைத்ததால் அவள் எழுந்தாள்.

''வாடாலே'' என்று சின்னப் பொட்டலத்தை எடுத்துப்போக முயன்றாள். குழந்தை கையை மடக்கிக் கொண்டு சிணுங்கினான். ''மாட்டியா, இரு இரு'' என்று கூறிக்கொண்டு எழுந்து போய்விட்டாள். விளையாட்டுக் கூச்சலோடு நடந்துகொண்டிருந்தது.

சின்னக் குழந்தை கடையில் உட்கார்ந்திருந்தான். அவன் அடிக்கடி தியானத்தில் இருப்பதைப்போல் கண்களை மூடிக்கொண்டான். கடையைப் பார்த்தால் ஏதோ வெறுப்பாக இருந்ததுபோல் தோன்றிற்று. அதே சமயத்தில் ஆசை இருந்ததும் தெரிந்தது. அவன் தேக்கமாக இப்படி உட்கார்ந்திருந்தபொழுது சர்க்கரை வள்ளிக் கிழங்கை ஈக்கள் வந்து மொய்த்தன. பையன் கழியை எடுத்து அவற்றை விரட்டியபொழுது கழியின் ஒரு நுனி அவன் மேலேயே விழுந்துவிட்டது. அவன் திடுக்கிட்டுப் பயந்துபோய்க் கண்களை மூடாமல் சிறிது நேரம் இருந்தான்.

கடைக்குக் கிராக்கிகள் வரவில்லை. குழந்தை கடையில் உட்கார்ந்திருந்ததே அவர்களை விரட்டிவிட்டதோ என்னவோ! கற்களைத் தூக்கிப்போட்டு விளையாடும் ஓசை கேட்டுக்கொண்டே இருந்தது. எல்லாம் ஏதோ ஒருவித அமைதியாக இருந்தது.

குழந்தை ஒரு தரம் விளையாடுபவர்களைப் பார்த்து விட்டுக் கடலைக் கூறிலிருந்து ஒரு கடலையைக் கடித்துத் தின்றுவிட்டான். திருட்டுத்தனத்தின் வேகத்தில்

தோலெடுக்க நேரம் இல்லே. அது முடிந்து மற்ருெரு கடலேயைத் தின்றுகொண்டிருந்தான்.

விளேயாடிக்கொண்டிருந்த அக்காவுக்கு எந்த யக்ஷிணி சொல்லிற்ருே என்னவோ திடீரென்று பாதி ஆட்டத்தில் விட்டுவிட்டு வந்தாள். பையன் கடலேயைக் கடித்துக் கொண்டிருந்த கோபத்தில் கை தாளுக உயர ஏறிற்று. ஆளுல் இறங்கவில்லே. ஏதோ தற்காப்பு எண்ணம் இடை யில் கட்டை போட்டுவிட்டது. அடித்துவிட்டால் அவன் வீரிட்டு அழுவான். அம்மா வந்துவிடுவாள். ஒன்றுக்கு ஒன்பதாகக் கிடைத்துவிட்டால்? கை இறங்கவில்லே.

ஆகையால் தடிப்பயலே என்று லேசாகக் காதைப் பிடித்திழுத்து அவனே நகர்த்தி உட்கார வைத்தாள். பாதி கடித்த கடலேயைப் பிடுங்கி எறிந்துவிட்டுக் கூறுகளேப் பார்த் தாள். குறைவுபட்ட கூறு தெரிந்தது. பள்ளத்தை மூடாமல் இருந்தால் விழ வேண்டியதுதானே? வேறு இரண்டு கூறுகளிலிருந்து ஒவ்வொரு கடலேயை எடுத்து இதில் சேர்த்துச் சரிக்கட்டிவிட்டு வியாபாரத்திற்கு உட் கார்ந்தாள். அப்பொழுது வந்த கிராக்கியின் தலேயில் இரண்டு பதிஞெரு கடலேக் கூறையும் கட்டிவிட்டாள். அது தான் அவள் வியாபாரத் திறமை.

நீலி ஆஜர் பார்க்க வந்தபொழுது இவள் மிடுக்காய் இருந்தாள். குழந்தை சாதுவாக இருந்தான். பக்கத்தில் சிறுமிகள் விளேயாடிக் கொண்டிருந்தார்கள். தெரியாமலா மாமியாரைக் கடையில் வைக்கிறேன் என்று சந்தோஷப் பட்டுக்கொண்டே திரும்பிஞள்.

"இன்னம் கொஞ்சம் இரு. சோத்தெ வடிச்சூட்டு வாரேன். பய அழுதா ஒரு கடலே குடு'' என்று சொல்லி விட்டுப் போய்விட்டாள்.

அந்தப் பையன் எப்படித்தான் தெரிந்து கொண் டானே! சிணுங்கிக்கொண்டே கையை நீட்டிஞன். விளே

யாட்டைக் கெடுத்த பையன்மீது கோபம் சிறுமிக்குத் தணியவில்லை. அநுமதி இருந்தும் கடலை கொடுக்கவில்லை. அவன் நீட்டிய கையையும் மடக்கவில்லை. கல்லுளி மங்கனாகி விட்டபொழுது சிறுமிக்குக் கோபம் ஆத்திரமாகிவிட்டது.

விருட்டென்று கடலைக் கூறுகளை எல்லாம் ஒன்றாகச் சேர்த்துக் கட்டினாள். சர்க்கரை வள்ளிக்கிழங்குத் தட்டையும் சேர்த்துக் கூடையில் வைத்தாள். சாக்கை உதறிக் கையில் எடுத்துக்கொண்டு வாடாலே என்று கிளம்பி விட்டாள். வெகு நாள் பழகிய படிமானத்துடன் அவன் பின்னே தத்தித் தத்திச் சென்றான்.

நீலி வீட்டுக் கூரை வாசல் படியிலேயே சிறுமி நின்றாள். "பெரியக்கா, ஆயா வந்து கூப்பிட்டுச்சு; கடையைக் கட்டிப்பிட்டேன்" என்று கூடையை இறக்கி வைத்து விட்டுச் சென்றுவிட்டாள்.

நீலி ஒன்றும் சொல்லவில்லை. கூடையிலிருந்து சுருக்குப் பையை எடுத்து விற்பனைக் கணக்குப் பார்த்தாள். சம்பளம் கொடுத்து ஆள் வைத்தால்தானே அதட்ட முடியும்?